**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE UTHIRAMERUR.</u>**

**CC No. 111/2023**

**LW – 3 as Examined PW - 3**

| | |
|---|---|
| Name: வெங்கடேசன் | Age: |
| Father's Name: ஏழுமலை<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 11.11.2025 | |

**<u>11.11.2025</u>**

**எதிரி ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.16 PM.**

**அ.சா. 3 – முதல் விசாரணை**

நான் மலையாங்குளம் கிராமத்தில் வசித்து ஒயரிங் வேலை செய்துவருகிறேன். அ.சா.1 கண்ணன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு வழக்கிற்குரிய அனைத்து ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 02.05.2023 ம் தேதி பகல் 1.30 மணியளவில் சாட்சி கண்ணன் என்பவர் தனது நிலத்தில் ஏர் ஓட்டிக்கொண்டு இருந்தார் என்றால் சரியல்ல. அப்போது நில பிரச்சனை சம்பந்தமாக ஆஜர் எதிரி அவரை அசிங்கமாக திட்டி முதுகில் காலால் எட்டி உதைத்து கையால் கன்னத்தில் அறைந்து கீழே

தள்ளினார் என்றால் சரியல்ல. மேலும் ஆஜர் எதிரி கீழே கிடந்த மண்கட்டி மற்றும் கருங்கால்லால் சாட்சி கண்ணனின் முதுகிலும் மார்பிலும் அடித்து கொலை செய்வதாக மிரட்டினார் என்றால் சரியல்ல. மேலே சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு ஆஜர் எதிரி ஊர்காரர் என்பதினால் அவரை காப்பாற்றவேண்டும் என்று அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.17 PM**

**Sd/-R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE UTHIRAMERUR.**

**CC No. 111/2023**

**LW – 2 as Examined PW - 2**

| | |
|---|---|
| Name: நாராயணன் | Age: |
| Father's Name: **சுப்பிரமணி**<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 11.11.2025 | |

**11.11.2025**

**எதிரி ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.12 PM.**

**அ.சா. 2 – முதல் விசாரணை**

நான் மலையாங்குளம் கிராமத்தில் வசித்து டிரைவாக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 கண்ணன் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு வழக்கிற்குரிய அனைத்து ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 02.05.2023 ம் தேதி பகல் 1.30 மணியளவில் சாட்சி கண்ணன் என்பவர் தனது நிலத்தில் ஏர் ஓட்டிக்கொண்டு இருந்தார் என்றால் சரியல்ல. அப்போது நில பிரச்சனை சம்பந்தமாக ஆஜர் எதிரி அவரை அசிங்கமாக திட்டி முதுகில் காலால் எட்டி உதைத்து கையால் கன்னத்தில் அறைந்து கீழே

தள்ளினார்  என்றால் சரியல்ல. மேலும் ஆஜர் எதிரி கீழே கிடந்த மண்கட்டி மற்றும் கருங்கால்லால் சாட்சி கண்ணனின் முதுகிலும் மார்பிலும் அடித்து கொலை செய்வதாக மிரட்டினார் என்றால் சரியல்ல. மேலே  சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு ஆஜர் எதிரி ஊர்காரர் என்பதினால் அவரை காப்பாற்றவேண்டும் என்று அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.15 PM**

**Sd/-R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC No. 111/2023**

**LW – 1 as Examined PW - 1**

| | |
|---|---|
| Name: **கண்ணன்** | Age: |
| Father's Name: **கணேசன்**<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 11.11.2025 | |

**11.11.2025**

**எதிரி ஆஜர்**

**விசாரணை தொடங்கிய நேரம் 11.49 AM.**

**அ.சா. 1 – முதல் விசாரணை**

நான் மலையாங்குளம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2023 ம் வருடம் 5 வது மாதத்தில் ஒரு நாள் பகல் 11.00 மணியளவில் என் கழனியில் நான் ஏர் ஓட்டிக்கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரியான சிவா என்பவர் ஏர் ஓட்டக்கூடாது என்று சொல்லி என்னை ஓத்தா கோம்மா என்று சொல்லி கையால் மார்பில் குத்தி கீழே தள்ளிவிட்டார். நான் சேற்றில் கீழே விழுந்துவிட்டேன். சேற்றில் மிதங்கியிருந்த காலணியை எடுத்து சூழற்றி அடித்தேன். ஆஜர் எதிரி ரோட்டில் இருந்தார். நான் இது குறித்து உத்திரமேரு்ர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகாராகும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.ஆ.1 ஐ யார் எழுதினார் என்றால் என்னுடைய வழக்கறிஞர் எழுதினார். மேற்படி சம்பவம் தொடர்பாக நான் மருத்துவமனையில் சிகிச்சை ஏதேனும் பெற்றேனா என்றால் காஞ்சிபுரம் மருததுவமனையில் சிகிச்சை பெற்றேன். 3 நாள் அங்கிருந்து சிகிச்சை பெற்றேன். எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் சம்பவதன்று புகார் அளித்தேன். எதிரியுடைய நிலம் என்னுடைய நிலத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரிக்கு 10 செண்ட் நிலம் கிரையம் கொடுத்தேனா என்றால் கிரையம் கொடுக்கவில்லை. வழிதான் கொடுத்தேன். மேற்படி சம்பவம் அந்த 10 செண்டில் நான் ஏர் ஓட்டிக்கொண்டு இருந்தபோது நடந்ததா என்றால் சரிதான். நான் வழிக்காக கொடுத்த 10 செண்ட் என் மகன் அஜித்குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அஜித்குமார் மூலமாக தான் பத்திரபதிவு செய்து எதிரி வசம் மேற்படி இடத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 2 வருடங்கள் முன்பாக 2021 ல் தான் நான் அந்த இடத்தை ஒப்படைத்தேன் என்றால் சரிதான். எதிரியின் பெயரில் அந்த இடத்திற்கான பட்டா மாற்றம் பெற்றுள்ளது என்றால் சரிதான். எதிரி அதற்கு மாற்றாக 12 செண்ட் கொடுப்பது குறித்து ஏழுத்து பூர்வமாக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் இல்லை. அதனை என் பெயருக்கு கிரையம் கொடுப்பது தொடர்பாக எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த 10 செண்டிற்கு உரிய பட்டா சம்பவத்தின் போதும் தற்போதும் என் பெயரில் என்னுடைய மகன் பெயரிலும் இல்லை என்றால் சரிதான். நான் அனுபவதில் மட்டுமே இருந்து வந்தேன். மேற்படி சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது நான் ஆஜர் எதிரியை என்னுடைய காலணியை கொண்டு அடித்ததாக

எதிரி என் மீது புகார் அளித்து அதன் பேரில் வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி என் மீது அளித்த புகாரின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு CC 142/2023 என்றால் சரிதான்.

நான் சொல்வதுபோல் எதிரி என்னை என்னுடைய மார்பில் கையால் தாக்கல்வில்லை என்றாலும் அவர் அசிங்கமான வாரத்தைகளால் திட்டவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு என்னுடைய மகன் மூலம் 10 செண்டை கிரையம் கொடுத்துவிட்டு எதிரியிடம் வீன் சண்டை போடவேண்டும் என் நோக்கத்துடன் நான் கிரையம் கொடுத்த 10 செண்டில் ஏர் ஓட்டியதை எதிர்த்து கேட்ட எதிரியின் மீது காலணினை கொண்டு தாக்கினேன் என்றால் சரியல்ல. இந்த 10 செண்ட் தொடர்பாக நான் இந்நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எதிரி என்னிடம் என்னுடைய 10 செண்ட் நிலத்தை வாங்கிகொண்டு மாற்றாக 12 செண்ட் இடத்தை கொடுப்பதாக சொல்லிவிட்டு என்னை ஏமாற்றியதாக நான் சொல்வது குறித்து புகார் ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. எதிரிக்கு 10 செண்ட் இடத்தை தகுந்த பிரதிபலனுக்கு கிரையம் கொடுத்துவிட்டு அவரிடம் வீன் தகராறு செய்யவேண்டும் என்பதற்காக இந்த புகாரினை கொடுத்து இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தான் இந்த வழக்கில் உண்மையாக பாதிக்கப்பட்ட நபர் என்றாலும் அதன் பேரில் எதிரி காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரம் தெரிந்துகொண்டு நானும் காவல் நிலையத்தில் சென்று புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.10 PM

**Sd/–R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
உத்திரமேரூர்.